# சுற்றுமடல்

கடித எண்: GR/7/2013

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

நமது மறைமாவட்டத்தின் குருகுலமுதல்வர் பேரருள்தந்தை பிலிப் கொடியந்தறா அவர்களுக்கு ஏற்பட்ட விபத்தைப் பற்றி அனைவரும் அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். மிகவும் வருத்தத்திற்குரிய இந்நிகழ்வானது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றாலும் நிச்சயமாக நமது செபங்கள் பேரருள்தந்தை அவர்கள் மிக விரைவாக நலம் பெற்று இறைப்பணியாற்ற துணைபுரியும் என்ற திடமான நம்பிக்கையுடன் அவருக்காக செபம் செய்ய இச்சுற்றுமடல் வாயிலாக உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். பேரருள்தந்தை அவர்கள் 31.01.2013 வியாழக்கிழமை அன்று இரவு சங்ஙனாச்சேரிக்கு பயணிக்கின்ற வழியில் திருவல்லா என்னும் இடத்திற்கு அருகில் வைத்து விபத்திற்கு உள்ளானார்கள். அவருடன் அருள்தந்தை மிஜோ அவர்களும் ஓட்டுனரும் இருந்தனர். இவர்கள் இருவருக்கும் சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளது. பேரருள்தந்தை பிலப் கொடியந்தறா அவர்கள் பின் இருக்கையில் அமர்ந்திருந்ததால் வாகனம் விபத்திற்குள்ளானபோது அவருடைய தலையிலும் முதுகெலும்பிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. கவலைக்கிடமான இச்சூழலில் பேரருள்தந்தை அவர்கள் திருவல்லா பு஁பகிரி மருத்துவமனையிலே உடனடியாக அனுமதிக்கப்பட்டார்கள். தற்போது தேவையான மருத்துவ உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

மருத்துவர்களாலோ மருந்துகளாலோ குணமாக்க இயலாததை குணப்படுத்துபவரே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. உயிரின் ஊற்றும் உறைவிடவுமான அவரிடம் நம் வேண்டுதல்களை எழுப்புகின்ற போது நிச்சயமாக அவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனடியாக பதிலளிக்கப்படும் என்பதில் எந்தவித ஐயவுமில்லை. எனவே பேரருள்தந்தை பிலிப் கொடியந்தறா அவர்களுக்காக தொடர்ந்து மன்றாடுவோம். இன்று திருப்பலி முடிந்தவுடன் 10 நிமிடங்கள் பேரருள்தந்தை பிலிப் கொடியந்தறா அவர்களுக்காக எல்லா ஆலயங்களிலும் சிறப்பு செபங்கள் நடத்த உங்களை கேட்டுகொள்கிறேன். நலன்களின் வள்ளலான நம் இறைவன் பேரருள்தந்தை அவர்களுக்கு எல்லா நலன்களையும் அருளி மிக விரைவாக திரும்பி வர அனைவரும் மனமுருகி செபம் செய்ய உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

தக்கலை
01.02.2013

**மார். ஜார்ஜ் இராஜேந்திரன்**
(தக்கலை மறைமாவட்டம்)

---

குறிப்பு: இச்சுற்றுமடலை பிப்பிரவரி 3 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வாசிக்கவும்.